ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வி,

வேலூர் மாவட்டம்.

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி. செ. மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**

**ந.க.எண்:1464/CSR NS-NOP/DC6/ஒபக/2023-2024, நாள்: 21.09.2023**

**பொருள்** : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – நம்ம School நம்ம ஊரு பள்ளி – Donation in Kind from "M/s.Malabar Gold & Diamond Pvt. Ltd." – உடன் இணைந்து மற்றும் செயல்படுத்தும் முகவராக "Malabar Charitable Trust" – உதவித்தொகை திட்டங்களை செயல்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது – தகுதி வாய்ந்த மாணவியர்களை கண்டறிந்து இணைய வழியில் விண்ணப்பிக்க தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல் – சார்பு.

**பார்வை** : சென்னை-06, நம்ம School நம்ம ஊரு பள்ளி, உறுப்பினர்-செயலாளரின் கடிதம் Rc.No.268/J1/NS NOP/2023, dated:08.09.2023.

*******

**நம்ம School Foundation** அறக்கட்டளை என்பது புதுதில்லியில் உள்ள கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தின் கீழ் (பிரிவு 8) பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாகும். இப்புதிய முயற்சியின் மூலம் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் அரசுப் பள்ளிகளின் மேம்பாட்டிற்காக பொதுமக்கள், தனிநபர், முன்னாள் மாணவர்கள், வணிகம், NPO_க்கள் (Non-Profit Organisation), பெரு, சிறு மற்றும் குறு நிறுவனங்களின் CSR (Corporate Social Responsibility) கார்ப்பரேட் சமூகப் பொறுப்பின் கீழ் நிதி, பொருட்கள் மற்றும் சேவைகள் பெறும் பொருட்டு 14.11.2022 அன்று துவங்கப்பட்டது. இதன் வாயிலாக பெறப்படும் நிதி, பொருட்கள் மற்றும் சேவைகளானது தமிழகத்தில் உள்ள 37,558 அரசுப் பள்ளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிவகை செய்கிறது.

இதன் தொடர்ச்சியாக "M/s. Malabar Gold & Diamond Pvt. Ltd." - அவர்களின் CSR நிதியின் கீழ், "Malabar Charitable Trust" அவர்களின் செயல்படுத்தும் முகமையுடன் இணைந்து, வீடற்றவர்களுக்கான இல்லம், சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு போன்ற முன்னெடுப்புகளின் முக்கிய நகர்வாக பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்ற சீரிய நோக்கத்தின் ஒரு பகுதியாக பள்ளி மாணவிகளுக்கான உதவித்தொகை திட்டங்களை செயல்படுத்த விருப்பம் தெரிவித்துள்ளனர்.

2023-24 கல்வியாண்டுக்கான உதவித்தொகையை 13 மாவட்டங்களில் வழங்குவதற்கு அவர்கள் ஆர்வமாக உள்ளனர். அவர்கள் "தான முறையில் நன்கொடை" - ("Donation in Kind") என்பதைத் தேர்ந்தெடுத்து, செயல்பாட்டின் மூலம் வழிகாட்ட தங்கள் செயல்படுத்தும் முகமையுடன் இணைத்துக்கொண்டு, தங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வலர்களைப் பயன்படுத்துவதன் மூலம் தாங்களாகவே செயல்படுத்த ஆர்வத்துடன் உள்ளனர்.

அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் குடும்பப் பின்னணி, பெற்றோரின் ஆதரவு, "Malabar Charitable Trust" நிறுவனத்தால் நிர்ணயிக்கப்பட்ட குடும்ப வருமானம் மற்றும் கல்வியில் மாணவிகளின் மதிப்பெண்கள் மற்றும் விடாமுயற்சியுடன் கல்வியில் சிறந்து விளங்கும் மாணவிகளைக் கண்டறிந்து தேர்வு செய்யும் பணியை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை இதன் மூலம் "Malabar Charitable Trust" முகமைக்கு அனுமதி வழங்குகிறது.

| TN REGION – SCHOLARSHIP APPLICATION FOR FY – 2023-24 | | | |
|---|---|---|---|
| **S. No.** | **Name of the District** | **Amount Rs. (In Lakhs)** | **Count of Students** |
| **1** | **Vellore** | **5,75,622** | **78** |

(*தெரிவு செய்யப்படும் மாணவிகளுக்கு உதவித்தொகை ரூ.6000/- முதல் ரூ.10,000/- வரை மாறுபடும்.)

இதன் மூலம் அனைத்து அரசு / மாநகராட்சிப் பள்ளி தலைமையாசிரியர்கள் குறிப்பிடப்பட்டுள்ள உதவித்தொகை திட்டத்தினை திறம்பட செயல்படுத்துவதை உறுதிசெய்யவும், கண்காணிக்கவும், மாணவியர்களை தேர்ந்தெடுப்பதிலும், விண்ணப்பிப்பதற்கும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இணைய வழியில் விண்ணப்பிக்க **30 செப்டம்பர் 2023**_க்குள் சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில், இந்த ஆண்டின் டிசம்பர் மாத இறுதிக்குள் மாணவர்களுக்கு உதவித்தொகையை விநியோகிக்க இது உதவியாக இருக்கும். மேலும், பின்வரும் வழிகாட்டுதல்களையும் கடைபிடிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

► மாணவிகளைக் கண்டறிந்து தேர்வு செய்யும் பணி மற்றும் மாணவிகளுக்கு உதவித்தொகை வழங்குதல் (இணையவழி/Passbook Entry) ஆகியவை மற்றும் வருகை தரும் நன்கொடையாளர்கள்/செயல்படுத்தும் நிறுவனம்/BRTE_க்கள் மூலம் புகைப்பட ஆவணங்களை சேகரித்து வைத்துக்கொள்ளவும். மேலும் அதை TNSED பெற்றோர் செயலியில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

► நிகழ்ச்சி நிறைவுச் சான்றிதழ் Programme Completion Certificate, Direct Benefit Transfer (நேரடிப் பலன் பரிமாற்றம் - DBT) Cheque Instrument Details அறிக்கையினை முதன்மைக் கல்வி அலுவகத்தில் "M/s. Malabar Gold & Diamond Pvt. Ltd. - Malabar Charitable Trust"

உடன் இணைந்து" சமர்ப்பிக்க வேண்டும் என தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

► பள்ளியின் முகவரியின் முழுப் பெயருடன் **“M/s. Malabar Gold & Diamond Pvt. Ltd.** – in partnership with **Malabar Charitable Trust”**, சிறிய அளவில் இவர்களின் இலட்சினையை (Logo) நல்லெண்ணத்தின் அடையாளமாக காட்சிப்படுத்த அனுமதிக்கப்படுகிறது.

**இணைப்பு:**

1. Annexure-1 Malabar - Eligibility criteria from the “M/s. Malabar Gold & Diamond Pvt. Ltd. – Malabar Charitable Trust”.
2. Annexure-2 Malabar - CSR Online form Process.
3. Annexure-3 Malabar - TN CSR PPT Scholarship Distribution.

21/9/23

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

21/09/2023

21/9/23

**பெறுநர்:**

1. அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொறுப்பு), வேலூர் மாவட்டம்.
3. அனைத்து ஆசிரிய பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.

**நகல்:**

1. சென்னை–06, நம்ம School நம்ம ஊரு பள்ளி, உறுப்பினர்-செயலாளர் அவர்களுக்கு பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்.